1968 பிப்ரவரி 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவிற்குப் பதில் சொல்லாமல் இருப்பதற்கு அமைச்சருக்கு உரிமை உண்டு.

சுற்றுலா மாளிகைகள்

***106 வினா.—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல-செய்தித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —

யாத்திரீகர் ஸ்தலமாக விளங்கும் ஸ்ரீரங்கத்தில் டூரிஸ்ட் பங்களாக்கள் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : ஸ்ரீரங்கம் தமிழ்நாட்டில் தலைசிறந்த யாத்திரிகர் ஸ்தலமாக இருந்து வருகிறது. ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அதனுடைய கலைச் சிறப்பை அறிந்த யுனஸ்கோ பல லட்சக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாக கொடுத்து சீர்திருத்திக் கொண்டு வருகிறது. ஆகவே, திருச்செந்தூரில் கட்டியுள்ளது போல் ஸ்ரீரங்கத்திலும் டூரிஸ்ட் பங்களாக்களைக் கட்டுவது பற்றி இனியாவது பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஸ்ரீரங்கத்திற்கும் திருச்சிக்கும் இடையே ஏறத்தாழ மூன்று மைல் தூரந்தான் இருக்கிறது. பெரும்பாலான பயணிகள் திருச்சியில் தங்கியிருந்து ஸ்ரீரங்கத்திற்குச் செல்லுகிறார்கள். அங்கிருந்து ஸ்ரீரங்கத்திற்கு இரண்டு நிமிஷத்திற்கு ஒரு பஸ் போகிறது. ஆகவே, ஸ்ரீரங்கத்தில் இப்போது டூரிஸ்ட் பங்களா கட்ட வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எம். எஸ். மணி : ஸ்ரீரங்கத்தில் அதிகாலத்தில் ஏராளமான சத்திரங்களைக் கட்டிப் போட்டிருக்கிறார்கள். இப்போது புதிதாக ஒன்றிரண்டு ஹோட்டல்களில் ரூம் கட்டி னுல்கூட அங்கு தங்குவதற்கு யாரும் செல்வதில்லை. திருச்சி மையமாக இருப்பதால் அங்குதான் தங்குகிறார்கள். ஆகவே ஸ்ரீரங்கத்திற்கு டூரிஸ்ட் பங்களா இப்போது அவசியமில்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா ?

(விடை இல்லை)

***107 *Q.*—Thiru N. KASIRAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state whether there is a proposal to construct a Tourist Bungalow in Kumbakonam town ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இத்தகைய திட்டம் எதுவும் அரசிடம் தற்பொழுது இல்லை.

திரு. நா. காசிராமன் : முதல் கேள்விக்குப் பதில் அளிக்கும் போது திருச்சி ஸ்ரீரங்கத்திற்கு மூன்று மைல்களுக்குள்ளாக இருக்கிறது, அங்கு டூரிஸ்ட் பங்களா இருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மை. தஞ்சை ஜில்லாவில் கும்பகோணம் வாணிபத் துறையிலும், விவசாயத் துறையிலும், மத சம்பந்தமாகவும், கல்வி சம்பந்தமாகவும் மிக முக்கியமான ஒரு நகரம். அங்கு வந்துபோவோர்களின் எண்ணிக்கை அதிகம். அங்குள்ள பயணி மாளிகையில் இடம் போதவில்லை ; எஸ்டிமேட்ஸ் கமிட்டி சார்பில் வந்தவர்கள் கூட சமீபத்தில் கஷ்டப்பட்டார்கள் என்பதையும் உணர்ந்து அரசாங்கம் அங்கு ஒரு சுற்றுலா மாளிகை கட்ட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கல்வி சம்பந்தப் பட்டவர்கள், வாணிகர்கள் செல்கிறார்கள் என்றால் இப்போதுள்ள வசதிகளே ஏராளமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தவிர பக்தர்கள் செல்வதற்காக என்று கட்டித் தருவதற்கான அவசியம் இல்லை. கும்பகோணத்தில் 12

ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மகாமகம் வருகிறது. அப்போது கூட்டம் அதிகம் வந்து சேரும். மேலும் வந்து செல்கிற பிரயாணிகளுக்கு அதிகப்படி இடவசதி தேவை என்று சொன்னால் அதை நகரமன்றத் தலைவர் அவர்களே, நகரமன்றச் சார்பில் கட்டித் தந்தால் நலமாயிருக்கும்.

நடமாடும் மருத்துவ மனைகள்

* 108 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—போதுமான M.B.,B.S. டாக்டர்கள் கிடைக்காத காரணத்தால் கிராமங்கட்கு Van மூலம் குறிப்பிட்ட நேரங்கட்கு டாக்டர் சென்று வரும் திட்டத்தை அமுல் நடத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நடமாடும் மருத்துவ மனைகள் ஆலங்காயம், கூடலூர், உதகமண்டலம், செய்யூர், ஹரூர், ஜெயங்கொண்டசோழபுரம், சங்கரன்கோயில், ராமநாதபுரம், கொடைக்கானல், திண்டுக்கல், ஈரோடு ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில் அங்கு நிரந்தரமாக டாக்டர்கள் வேண்டுமென்று பலமுறை கேட்டும்கூட யாரும் வராத நிலை இருக்கிறது. இதேபோன்று தமிழகத்தில் பல இடங்களில் எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் இல்லாமல் கிராம மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே வான் மூலம் மருத்துவ வசதி செய்து கொடுக்க குறிப்பிட்ட கிராமங்களுக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி எல்லாக் கிராமங்களுக்கும் ஒரு டாக்டர் சென்றால் பரவலாக சென்று வர வசதியாக இருக்கும். ஆகவே அந்த முறையை அமல் படுத்தி மேலும் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்க வசதியாக இருக்கும். ஆகவே அந்த முறையில் அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா ? திருப்பூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியையும் சேர்த்து அப்படிப்பட்ட ஒரு வானை அமர்த்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : போதுமான எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு சரியானதல்ல. உறுப்பினர் அவர்களின் ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : இந்த எம்.பி.பி.பிஸ். டாக்டர்களுக்கு சம்பளம் சரியானபடி இல்லாததினால்தான் இந்த நாட்டில் யாரும் சர்க்கார் சேவைக்கு வருவதில்லை. இந்தக் குறை இருபது வருடங்களாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, வைத்திய வசதிகளை இன்னும் சிறிது விஸ்தரிக்க இந்த சர்க்கார் தங்கள் நிதியிலிருந்தோ அல்லது மத்திய சர்க்காரிலிருந்தோ டாக்டர்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுப்பதற்கு யோசனை ஏதாவது இருக்கிறதா ? அதற்கு ஏதாவது முயற்சி செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கு கொடுக்கிற சம்பளம் போதுமானதல்ல என்ற முறையீடு எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை. ஏற்கனவே கொடுக்கிற சம்பளம் போதுமானது என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. எம். கண்ணப்பன் : பொள்ளாச்சி வட்டாரத்தில் உள்ள வால்பாறை, ஆனமலைப் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் 20, 30 மைல்கள் சென்று மருத்துவ வசதி பெறவேண்டிய நிலை இருப்பதால் அந்தப் பகுதிகளுக்கும் இந்த நடமாடும் மருத்துவ மனையை ஏற்படுத்த இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொள்ளாச்சியில் நல்லதொரு மருத்துவமனை இருந்து வருகிறது. வால்பாறை பகுதியைப் பொறுத்த வரையில் சிங்கோனா மருத்துவ மனைக்கு ஒரு வான் வாங்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.